தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விகாரி, ஆடி 3, திருவள்ளுவர் ஆண்டு 2050

2019 ஜூலை 19, வெள்ளிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின்."

ஆட்சியாளர் தன் நாட்டில் உள்ள மக்கள் அனைவரையும் பேணிப் பாதுகாப்பார். அவரை நீதி நெறி தவறாத அவரது நல்லாட்சியானது காப்பாற்றும்.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 141, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பன்னீர்செல்வம், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

141—

துணை மின் நிலையம்

***13790—திரு. வி. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசப்பாக்கம் தொகுதி, புதுப்பாளையம் ஒன்றியம், வாசுதேவன்பட்டு கிராமத்தில் 33/11 KV *துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கலசப்பாக்கம் தொகுதி, புதுப்பாளையம் ஒன்றியம், வாசுதேவன்பட்டு பகுதியில் ரூ.3.2 கோடி மதிப்பீட்டில் ஒரு புதிய துணை மின் நிலையம் அமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. 30-9-2019 ஆம் நாளுக்குள் பணிகள் முடிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பன்னீர்செல்வம் அவர்கள்.*

திரு. வி. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும்' என்ற வைர வரிகளை ஏசுபிரான் உலகிற்கு வழங்கினார். தட்டாமலேயே, கேட்காமலேயே திட்டங்கள் பல தந்து, 'எல்லாரும் எல்லாமும் பெறவேண்டும், இங்கே இல்லாமை இல்லாத நிலை வேண்டும்' என்று தமிழகத்தை முதன்மை மாநிலமாக மாற்ற பாடுபட்டு, தன் வாழ்நாளையே அர்ப்பணித்து மறைந்த இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சோதனைகளையெல்லாம் சாதனைகளாக்கி வரும் சரித்திர நாயகன், (மேசையைத் தட்டும் ஒலி) காவேரி நீரைப் பெற்றுத் தந்த காவேரி நாயகன், துரோகங்களைத் துரும்பாக்கி, எதிர்ப்புகளை அரணாக்கி, அல்லும் பகலும் அயராது உழைத்துக்கொண்டிருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் ஐயா எடப்பாடியார் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் ஐயா ஓ.பி.எஸ். அவர்களையும், இன்றைக்கு தமிழகத்தை மின்வெட்டே இல்லாத மாநிலமாக உருவாக்கி மின்சாரத் துறையினை சிறப்பாக வழிநடத்தி வரும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். இந்த அவையிலே மூன்றாவது முறையாக காவல் துறை மானியக் கோரிக்கையினை தாக்கல் செய்யவிருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் ஐயா எடப்பாடியார் அவர்களை*

மீண்டும் ஒரு முறை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதி, வாசுதேவன்பட்டு பகுதியில் ஒரு துணை மின் நிலையம் அமைக்க உத்தரவிட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது சார்பிலும், தொகுதி மக்களின் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கலசப்பாக்கம் தொகுதிக்குட்பட்ட கலசப்பாக்கம் ஒன்றியம், காலூர் ஊராட்சியில் 230/110 கே.வி. துணை மின் நிலையம் அமைக்க மூன்று ஆண்டுகளுக்கு முன்பு 9.5 ஏக்கர் அரசு நிலம் கையகப்படுத்தப்பட்டு தற்போதும் அந்தப் பணிகள் துவங்கப்படாமல் உள்ளன. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் துணை மின் நிலையத்தினை அமைத்துத்தர முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன காலூர் பகுதியில் 10 ஏக்கர் நிலம் தோப்புப் புறம்போக்கு நிலமாக இருக்கின்றது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இதுகுறித்து அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார். அந்தக் கோப்பு தற்போது* Commissioner of Land Administration *அலுவலகத்தில் உள்ளது. அந்தக் கோப்புக்கான* order *கிடைத்தவுடன் உடனடியாக அந்தப் பணிகள் துவங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பன்னீர்செல்வம் அவர்கள்.*

திரு. வி. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கத்தில் உள்ள உதவி மின் செயற்பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர் அலுவலகங்கள் கடந்த 15 வருடங்களாக வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. அந்த அலுவலகங்களுக்கு இந்த ஆண்டு சொந்தக் கட்டடங்கள் கட்டித்தரப்படுமா என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்தில் மொத்தம் 154 அலுவலகங்கள் உள்ளன. அதில் கிட்டத்தட்ட 134 அலுவலகங்கள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் Assistant Engineer, Assistant Divisional Engineer அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்ட வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். சொந்தக் கட்டடம் கட்டுவதற்கான இடம் கிடைத்தவுடன் அது கட்டப்படும். தற்போது அந்த இரண்டு அலுவலகங்களுக்கும் சேர்த்து மாத வாடகையாக ரூ.2,300/-தான் கொடுக்கப்படுகின்றது. சொந்தக் கட்டடம் கட்ட வேண்டுமென்று சொன்னால், அதற்கு ரூ.50 இலட்சம் நிதி தேவைப்படுகின்றது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பழனிவேல் தியாக ராஜன் அவர்கள்.

முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட குடிசைமாற்று வாரியம், மேலவாசல் காலனி மற்றும் வீட்டு வசதி வாரியம், எல்லீஸ் நகர் காலனிகளில் எல்லாம் மேலே செல்லும் மின்கம்பி மூலமாக மின்சாரம் வழங்கப்படுவதனால், ஒரே கம்பியிலிருந்து 10, 16, 18, connections எடுக்கும்போது அதில் loss-க்கு அதிக வாய்ப்பு உள்ளது. Short circuit-க்கும் வாய்ப்புகள் உள்ளன. அதுபோல், மின் திருட்டுக்கும் வாய்ப்புகள் உள்ளன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுபோன்ற காலனிகளைக் கட்டும்போது அந்த main மின் கம்பிகளை underground cables-ஆக மாற்றியமைத்தால், இந்த மூன்று தவறுகளும் குறையும் என்ற அடிப்படையில் அதற்கு ஆவன செய்ய முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

2019 ஜூலை 19]

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, பாதுகாப்பும் குறைவாக இருக்கிறது. மின் திருட்டு மட்டுமல்ல, மின் loss மட்டுமல்ல, மக்களுக்குப் பாதுகாப்பும் குறைவாக இருக்கிறது. குடிசை மாற்று வாரியத்தின் மூலமாகக் கட்டப்படுகின்ற அடுக்குமாடிக் குடியிருப்புகளில், குடிசை மாற்று வாரியம் underground cable அமைப்பதற்குண்டான தொகையைக் கட்டினால், அதுகுறித்து மின்சார வாரியம் பரிசீலிக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பகுதி மாநகராட்சிக்குட்பட்ட பகுதியாக இருக்கும் என்று நினைக்கிறேன். ஒவ்வொரு மாநகராட்சியாக underground cable அமைக்கின்ற பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பகுதியில் ஆய்வு செய்து, மக்கள் பாதிக்கப்படுகின்ற வகையிலும், மக்களுக்கு பாதுகாப்பற்ற வகையிலும் இருந்தால், அதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 142, மாண்புமிகு உறுப்பினர் திரு. C.V. சேகர், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

142—

பாதாள சாக்கடைத் திட்டம்

***225—திரு. C.V. சேகர்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை தொகுதி, பட்டுக்கோட்டை நகராட்சி, மதுக்கூர் மற்றும் அதிராம்பட்டினம் பேரூராட்சிகளில் பாதாள சாக்கடைத் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?